# ராஜாங்கனய பிரதேச சபை
## அநுராதபுர மாவட்டம்

## 1 நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2011 ஏப்ரல் 04 ஆம் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2010 ஏப்ரல் 21 ஆம் திகதியும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

### 1.2 அபிப்பிராயம்

இவ்வறிக்கையில் காணப்படும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் காரணமாக கணக்காய்வுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள ராஜாங்கனய பிரதேச சபையின் 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்க முடியாதுள்ளது.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

நிதிக்கூற்றுக்களில் காணப்பட்ட கணக்கீட்டுக் குறைபாடுகள் மற்றும் அதன் மூலம் நிதிக்கூற்றுக்களுக்கு ஏற்பட்டிருந்த தாக்கம் தொடர்பான பொழிப்பொன்று கீழே காட்டப்பட்டுள்ளது.

| | குறைபாடுகளின் தன்மை | விடயங்களின் எண்ணிக்கை | நிதிக்கூற்றுக்கள் மீதான தாக்கம் | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | வருமானம் | செலவினம் | பொறுப்புக்கள் | சொத்துக்கள் |
| | | | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 |
| (அ) | நிதிக்கூற்றுகளில் அதிகரித்துக் காட்டுதல்கள் | 01 | - | - | 135 | |
| | - மேற்படி - | 01 | - | 135 | - | - |
| | - மேற்படி - | 02 | 805 | - | - | - |
| (ஆ) | நிதிக்கூற்றுகளில் குறைத்துக் காட்டுதல்கள் | 01 | - | - | 969 | - |
| (இ) | நிதிக்கூற்றுகளிலிருந்து விடுபட்டவை | 01 | - | - | - | 289 |
| (ஈ) | நிதிக்கூற்றுக்களில் பொருத்தமற்ற வெளிப்படுத்தல்கள் | 01 | 660 | - | - | - |
| | - மேற்படி - | 02 | - | 440 | - | - |

### 1.3.2 இணக்கம் செய்யப்படாத கணக்குகள்

நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 13 கணக்கு விடயங்களுக்குரிய மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 112,161,038 ஆக இருந்ததுடன், பட்டோலைகள்/அறிக்கைகளின் பிரகாரம் அம் மீதிகளின் மொத்தம் ரூபா 33,907,390 ஆக இருந்தது.

### 1.3.3 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) பிரதேச சபைக்காக அங்கீகரிக்கப்பட்ட கணக்கு முறைமையின் பிரகாரம் மூலதன ஈடுபாட்டிற்கான வருமானம் பங்களிப்புக் கணக்கினதும் நிலையான சொத்துக் கணக்குகளினதும் மீதிகள் சமமாக இருக்க வேண்டிய போதிலும் ஐந்தொகைத் திகதியில் உள்ளவாறு நிலையான சொத்துக் கணக்கின் மீதி ரூபா 7,052,930 ஆகவும் மூலதன ஈடுபாட்டிற்கான வருமானப் பங்களிப்புக் கணக்கின் மீதி ரூபா 14,109,226 ஆனமையால் அவ் இரண்டு கணக்குகளுக்கிடையே ரூபா 7,056,296 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது.

(ஆ) ஐந்தொகை திகதியில் உள்ளவாறு இலங்கை வங்கியின் சபையில் பெயரில் காணப்படுகின்ற நடைமுறைக் கணக்கின் காசேட்டின் பிரகாரம் மீதி ரூபா 59,686 தொகையாகவும் அது ஐந்தொகையில் ரூபா 62,024 எனவும் வெளிப்படுத்தப்பட்டிருந்தும் அதற்கான காரணம் விளக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.4 போலியான சொத்துக்கள்

மீளாய்வாண்டின் நிதிக் கூற்றுக்களில் ரூபா 538,663 பெறுமதியாக வெளிப்படுத்தப்பட்டுள்ள 04 விடயங்களுக்குரிய சொத்துக்கள் போலியான சொத்துக்களாக அவதானிக்கப்பட்டது.

### 1.3.5 கணக்காய்விற்கான சான்றின்மை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 17,152,336 கூட்டுத்தொகையான 08 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமானதாகச் சான்றுறுதிப்படுத்த / மெய்மையாய்வு செய்ய முடியாதிருந்தது.

### 1.3.6 இணக்கமின்மைகள்

கீழே காட்டப்பட்டுள்ள சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண அறிவுறுத்தல்கள் என்பனவற்றிக்கு இணங்காத சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) 1988 இன் பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாகம்) விதிகள் | |
| விதி 184 | ஊழியர் பிணைகள் முதலீடு செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் ரூபா 29,618 ஆன ஊழியர் பிணைகள் முதலீடு செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் | |
| நிதிப்பிரமாணம் 237(அ) மற்றும் (ஆ) | ரூபா 278,088 பெறுமதியான களஞ்சியப் பொருட்கள் வழங்கல்களுக்காக கொடுப்பனவு செய்கின்ற போது அது ஒப்பந்தத்தின் பிரகாரம் தரமான பொருட்களாக களஞ்சியத்திற்கு கிடைக்கப் பெற்றமை மற்றும் இருப்புப் பதிவேடுகளுக்கு உள்ளடக்கப்பட்டமை என்பன உறுதிப்படுத்தப்பட்டிருக்க வில்லை. |

## 2 நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 380,762 ஆக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் வருமானத்தை விஞ்சிய மீண்டுவரும் செலவினம் ரூபா 577,005 ஆக இருந்தது.

## 2.2 நிதிக் கட்டுப்பாடு

சபையின் காசு நடவடிக்கைகள் பேணப்பட்டுவருகின்ற நடைமுறைக் கணக்கின் வங்கிக் கூற்றின் பிரகாரம் மீளாய்வாண்டினுள் காணப்பட்ட சராசரிக் காசு மீதி ரூபா 1,678,300 ஆக இருந்தது. இப் பண மீதியின் மாதாந்த தேவைகளை இனங்கண்டு எஞ்சிய பணத்தை சபையின் நோக்கங்களைச் செயற்படுத்துவதற்கோ அல்லது ஆக்கபூர்வமான முதலீடுகளிலோ ஈடுபடுத்துவதற்கான கவனமோ செலுத்தப்பட்டிருக்கவில்லை.

## 2.3 வருமான நிர்வாகம்

### 2.3.1 மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரால் மீளாய்வாண்டின் பொருட்டும் முன்னைய ஆண்டின் பொருட்டும் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | | 2010 | | | 2009 | | |
|---|---|---|---|---|---|---|---|
| வருமான விடயம் | | மதிப்பிடப் பட்ட | உள்ளவா றான | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை | மதிப்பி டப்பட்ட | உள்ள வாறான | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
| | | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 |
| (அ) | வீதவரியும் வரியும் | - | - | - | 3 | - | 3 |
| (ஆ) | வாடகை | 2,900 | 2,862 | 139 | 1,267 | 1,910 | 378 |
| (இ) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 600 | 558 | 310 | 454 | 420 | 437 |
| (ஈ) | ஏனைய வருமானம் | 7,000 | 6,821 | 1,513 | 3,401 | 19,631 | 189 |

### 2.2.2 நீதிமன்றத்தண்டப் பணம்

பல்வேறு கட்டளை சட்டத்தின் கீழ் நீதவான் ஒன்றினால் 2010 திசெம்பர் 31 வரை அறவிடப்பட்டு பிரதம செயலாளருக்கு அனுப்பப்பட்டுள்ள ரூபா 617,931 தொகையான நீதிமன்றத் தண்டப்பணம் சபைக்கு கிடைக்க வேண்டியிருந்தது.

### 2.3.3 வீதவரிகள்

பிரதேச சபையின் அதிகாரப் பிரதேசத்திற்குட்பட்ட முன்னேற்றமடைந்த பிரதேசங்களை அடையாளங்கண்டு அறிவிக்கப்பட்டு அப்பிரதேசங்களில் அமைந்துள்ள அசையாத ஆதனங்களின் ஆண்டுப் பெறுமதி அடிப்படையில் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 134(1) ஆம் பிரிவின் அறிவுறுத்தல்களின் பிரகாரம் வீதவரியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3.4 ஏனைய வருமானங்கள்

1988 இன் இலக்க பிரதேச சபை (நிதி மற்றும் நிர்வாகம்) விதி இலக்கம் 59 மற்றும் விதி இலக்கம் 67 இன் அறிவுறுத்தல்களின் பிரகாரம் 2010 ஆம் ஆண்டிற்காக அதிகார பிரதேசத்தில் அமைந்துள்ள கைத்தொழில்கள் மற்றும் பொது வியாபரங்கள் மற்றும் துறைசார் தொழில்கள் தொடர்பாக மெய்மையாய்வொன்று மேற்கொண்டு அவ் அறிக்கை அடிப்படையில் வரித்தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை.

### 2.4 செலவினக் கட்டமைப்பு

மீளாய்வாண்டிற்கும் முன்னைய ஆண்டிற்குமான சபையின் பாதீடு செய்யப்பட்டதும் உள்ளவாறான செலவினமும் உரிய முரண்களுடன் கீழே காட்டப்பட்டுள்ளது.

| செலவின விடயம் | 2010 | | | 2009 | | |
|---|---|---|---|---|---|---|
| | பாதீடு செய்யப்பட்டது | உள்ளவாறான | முரண் | பாதீடு செய்யப்பட்டது | உள்ளவாறான | முரண் |
| | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 |
| **மீண்டுவரும் செலவினம்** | | | | | | |
| ஆளணி வேதனம் | 8,127 | 5,222 | 2,905 | 7,615 | 5,162 | 2,453 |
| ஏனையவை | 3,387 | 4,638 | (1,251) | 3,381 | 4,005 | (624) |
| உப மொத்தம் | --------- | ----------- | ------------ | --------- | ----------- | ------------ |
| மூலதனச் செலவினம் | 11,514 | 9,860 | 1,654 | 10,996 | 9,167 | 1,829 |
| மொத்தம் | 4,150 | 16,834 | (12,684) | 800 | 17,847 | (17,047) |
| | 15,664 | 26,694 | (11,030) | 11,796 | 27,014 | (15,218) |

## 2.5 மனித வள முகாமைத்துவம்

### 2.5.1 அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளவாறான பதவி அணி

(அ) 2010 திசெம்பர் 31 இல் சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவி அணி மற்றும் உள்ளவாறான பதவி அணி தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | பதவியினர் தரங்கள் | அங்கீகரிக்கப்பட்ட | உள்ளவாறான |
|---|---|---|---|
| (i) | பதவி நிலைத்தரங்கள் | 01 | 01 |
| (ii) | இரண்டாம் தரங்கள் | - | 02 |
| (iii) | ஆரம்ப தரங்கள் | 10 | 07 |
| (iv) | வேறு (அமைய / தற்காலிக) | -- | 11 |
| | மொத்தம் | 11 | 21 |

(ஆ) முகாமைத்துவ சேவைத் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்ட எல்லையை விஞ்சி பதவியணியை ஆட்சேர்த்து சபை நிதியத்திலிருந்து சம்பளம் மற்றும் கொடுப்பனவு செலுத்தப்பட்டிருந்தது. அதன்பிரகாரம் மீளாய்வாண்டில் அங்கீகரிக்கப்பட்ட எல்லையை விஞ்சிய 13 ஊழியர்களுக்காக சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளாக ரூபா 1,129,880 சபை நிதியத்திலிருந்து செலுத்தப்பட்டிருந்தது.

## 2.6 சொத்துக்களின் முகாமைத்துவம்

### 2.6.1 பெறவேண்டிய கணக்குகள்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெற வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 52,292,568 ஆக இருந்ததுடன் 01 ஆண்டிற்கு மேற்பட்ட காலமாகக் காணப்பட்ட கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 1,904,931 ஆக இருந்தது.

### 2.6.2 அறவிடப்படவேண்டிய ஊழியர் கடன்கள்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய ஊழியர் கடன் முற்பண மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 1,213,195ஆக இருந்தது. சேவையை விட்டுச் சென்ற மற்றும் தற்போதைய விபரங்களை அறிய முடியாத 13 ஊழியர்களிடமிருந்தும் அறவிடவேண்டியிருந்த ரூபா 118,296 ஆன கடன் மீதியை தாபன விதிக் கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 4.5 ஆவது பிரிவின் பிரகாரம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.6.3 மெய்மையாய்வு செய்யப்படாத சொத்துக்கள்

மெய்மையாய்வுச் சபை அறிக்கை மூலம் உறுதிப்படுத்தப்படாத 2010 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு புத்தகப் பெறுமதி அடிப்படையில் கணக்கிடப்பட்ட சொத்துக்களின் பெறுமதி ரூபா 15,294,265 ஆக இருந்தது.

## 2.7 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவையின் XV ஆம் அத்தியாயத்தின் 2.1 ஆம் பிரிவின் பிரகாரம் வெளிநாட்டு பயிற்சி நிகழ்ச்சித் திட்டத்திற்கான அங்கீகாரமளிப்பது அமைச்சின் செயலாளரினால் செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் தலைவர் பங்குபற்றியதற்கான பயிற்சி நிகழ்ச்சித் திட்டத்திற்காக அமைச்சுச் செயலாளரின் அங்கீகாரமின்றி ரூபா 118,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

## 2.8 செயலாற்றல்

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 03 ஆம் பிரிவின் பிரகாரம் பிரதேச சபை அதிகார பிரதேசத்தின் மக்களின் வசதிக்காக நலன்புரி நடவடிக்கைகளுக்குரிய நடவடிக்கைகள் மற்றும் சுகாதாரம், பொது வீதிகள் பொதுப் பயன்பாடு சேவைகளுக்குரிய செயற்பாடுகளை மேற்கொள்வதற்காக எதிர்வரும் வருடங்களின் செயற்பாடுகளுக்குரிய திட்டங்களை உள்ளடக்கிய கூட்டுத்திட்டமொன்றையும் அத்திட்டத்தினை மீளாய்வாண்டில் அமுல்படுத்தபடுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்காக செயல் நடவடிக்கைத் திட்டமொன்றும் தயாரிக்கப்பட்டு செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 2.9 உள்ளகக் கணக்காய்வு

நிறுவனத்தில் போதியளவு உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக விஷேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) வருமான நிருவாகம்

(இ) சொத்துக்கள் முகாமைத்துவம்

(ஈ) கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் கட்டுப்பாடு